# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே



நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 11.10.2022 | supeedsam.com | supeedsam@gmail.com


## உன்னிச்சை, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடர்பிலான கூட்டத்தினை

# புறக்கணித்த அரச தரப்பினர்



பெரும்போகப் பயிர்ச்செய்கை ஆரம்பக் கூட்டம் மண்முனை மேற்கு வவுணதீவில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

உன்னிச்சை, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடர்பில் இதன் போது அதிகளவில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.

எனினும், இன்றைய குறித்த கூட்டத்தினை அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணித்திருந்தமை பெரும் விசமர்சனங்களை தோற்றுவித்துள்ளது.

இந்தநிலையில் இதுதொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் கடும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளார்.

## மொட்டுக் கட்சியில் இணைந்தார் ரணில்



களுத்துறையில் நடைபெற்றக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உரையை வைத்துப் பார்க்கும் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டுள்ளார் என்பதே தெரிவதாக அக்கட்சியின் தவிசாளர்

02 ஆம் பக்கத்தில்...

## உடனடியாக தேர்தலை நடத்துங்கள்

இந்த முட்டாள்தனமான அரசாங்கம் நாட்டை அழித்து வருவதாகவும்,தேர்தலொன்று இல்லாமல் முன்னேற்றமொன்று இல்லை எனவும்,அரசாங்கம் தேர்தலை நடத்தாவிட்டால் வீதியில் இறங்கி அதற்காக போராடுவோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அன்று வரிசையில் நின்று மக்கள் செத்து மடியும் போது

02 ஆம் பக்கத்தில்...



## இளம் தலைவர்களை உருவாக்கப்போவதாக சந்திரிக்கா தெரிவிப்பு

கொலை மற்றும் கொள்ளையில் ஈடுபடாத படித்த இளம் தலைவர்களை உருவாக்கப்போவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

திருகோணமலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், நாட்டை

02 ஆம் பக்கத்தில்...

## ராஜபக்சக்களின் கூடாரத்தை விட்டு விலகும் முக்கிய புள்ளிகள்!

கொழும்பு அரசியலில் கடந்த சில நாட்களாக அதிரடியான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக கடந்த மே மாதம் இடம்பெற்ற அரசியற் புரட்சியினை தொடர்ந்து ராஜபக்சக்கள் அரசியல் பீதியான செயற்பாடுகளில் இருந்து சற்று ஒதுங்கிய நிலை காணப்பட்டது.

இவ்வாறான நிலையில் திடீர் திருப்பமாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஒன்றாக எழுவோம் களுத்துறையில் இருந்து ஆரம்பிப்போம் எனும்

02 ஆம் பக்கத்தில்...



## காலி முகத்திடலில் பதற்றம்

பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக காலி முகத்திடலில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக காலி முகத்திடல் நிலைய வீதி முழுமையாக மூடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சூழ்ச்சிகளை மேற்கொண்டு தேர்தலை ஒத்திவைக்க முயல்கிறார்கள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்கும் வகையில் இந்த அரசாங்கம் செயற்படுவதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தேர்தல் நடந்தால் அரசாங்கத்துக்கும் ஐக்கிய தேசியக்

02 ஆம் பக்கத்தில்...








## உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தால் சட்ட நடவடிக்கை



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுதந்திர மக்கள் சபையினால் நேற்று ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் பாரிய விழிப்புணர்வு பேரணி!




02 ஆம் பக்கத்தில்...



# தற்கொலை முயற்சிகளை தடுத்து நிறுத்துவோம் எனும் தோனிப்பொருளில் இடம்பெற்ற விளிப்புணர்வு நிகழ்வு





(சுமன்)

தற்கொலை முயற்சிகளில் இருந்து பொதுமக்களை மீட்டெடுக்கும் வகையில் மாற்றத்திற்கான பாதை பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் ''தற்கொலை முயற்சிகளை தடுத்து நிறுத்துவோம்'' எனும் தொணிப்பொருளிலிலான விளிப்புணர்வு நிகழ்வானது நேற்று (09) காலை கல்லடி பால முன்றலில் இடம்பெற்றது.

உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 7 லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்வதாக உலக சுகாதார அமைப்பின் தரவுகள் தெரிவிக்கின்றன. இத்தகைய மரணங்கள் அவர்களது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துவதோடு இதன் விளைவாக பலர் மன ரீதியான அழுத்தங்களுக்கும் உள்ளாகி வருவதாகவும் கூறப்படுகின்றது.

இந் நிலையில் 'தற்கொலை முயற்சிகளை தடுத்து நிறுத்துவோம் எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாற்றத்திற்கான பாதை பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இவ் விழிப்புணர்வு நிகழ்வானது முன்னெடுக்கப்படிருந்தது.

அதிதிகளின் வரவேற்புடன் ஆரம்பமான இந் நிகழ்வில் மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம் எனபன இடம்பெற்றதனை தொடர்ந்து வரவேற்புரை, தலைமையுரையுடன் தற்கொலைகள் தொடர்பான விளக்கவுரைகள் மற்றும் அதிதிகளின் சிறப்புரைகள் என்பனவும் இடம்பெற்றன.

அத்துடன் நிகழ்வின் விசேட அம்சமாக கிழக்கு பல்கலைக் கழக மாணவர்களினால் தற்கொலைகளும் அதற்கான தீர்வுகளும் பற்றி பொதுமக்களுக்கு தெளிவூட்டும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட வீதி நாடகமும் கல்லடி பழைய பால முன்றலில் அரங்கேற்றப்பட்டது.

இந் நிகழ்வுகளில் மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் க. சத்தியசீலன். கோரளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் திருமதி ஷோபா ஜெயரஞ்சித், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் மகளீர் அணி செயலாளர் சுசிகலா அருள்தாஸ், மட்டக்களப்பு மாவட்ட சென்ஜோண்ஸ் அம்புலன்ஸ் படையணியின் தலைவர் தேசமானிய அல்ஹாஜ் மீராசாகிப் உள்ளிட்டவர்களுடன் உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகள், மாற்றத்திற்கான பாதை அமைப்பின் அங்கத்தவர்கள், மாவட்ட பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புகளின் தலைவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஆசிரியர் தின விழாவில் ஓய்வு நிலை அதிபர், ஆசிரியர்கள் கௌரவிப்பு





(காரைதீவு சகா)

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இறக்காமம் அல்-மதினா வித்யாலயத்தில் ஆசிரியர் தின நிகழ்வு கல்லூரியின் அதிபர் MI. ஜௌபர் தலைமையில் நேற்று (10) திங்கட்கிழமை நடைபெற்றது.

இதில் ஓய்வு பெற்ற அதிபர்களான கு. உதுமாலெப்பை, ALM. சஹீட் ஆகியோருடன் ஓய்வு பெற்ற ஆசிரியர்களான M. முஹம்மத் தம்பி, MN-S. நபிஷா ஆகியோர் கௌரவ அதிதிகளாக அழைக்கப்பட்டு கல்லூரி சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் கோட்டக்கல்வி அதிகாரி UL. மஹ்மூத் லெப்வை ஆசிரியர் ஆலோசகர்கள் UL. ஜபீர் SLA. முனாப் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## ராஜபக்சக்களின் கூடாரத்தை விட்டு விலகும்

ஆள முடியாத அளவுக்கு தமக்கு வயதாகி விட்டது என்றும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் உருவாக்கப்போகும் இளம் தலைவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும் சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்தார்.

## ராஜபக்சக்களின் கூடாரத்தை விட்டு விலகும்...

தொனிப்பொருளில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கலந்துகொண்டு நீண்ட உரையொன்றினையும் ஆற்றியிருந்தார்.

குறித்த கூட்டமானது கடந்த மே9 புரட்சியின் பின்னர் மஹிந்த பங்கேற்கும் முதல் மக்கள் சந்திப்பாக அமைந்திருந்தது.

இதுஇவ்வாறு இருக்க பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையில் இயங்கும் சுயாதீன எம்.பிக்கள் குழுவில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மேலும் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணையவுள்ளனர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜீ.எல்.பீரிஸின் இல்லத்துக்குக் கடந்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று சென்றிருந்தது.

அநுர பிரியதர்சன யாப்பா, பிரியங்கர ஜயரத்ன, சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே, ஜயரத்ன ஹேரத், சந்திம வீரக்கொடி, ஜோன் செனவிரட்ன ஆகியோர் இந்தக் குழுவில் இருந்தனர்.

இவர்களுடன், டலஸ் அழகப்பெரும, சரித் ஹேரத், நாலக கொடஹேவா, டிலான் பெரேரா ஆகியோர் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

சந்திப்பின் நிறைவில், இரு தரப்பினரும் ஒருமித்த நிலைப்பாட்டுடன் செயற்பட உடன்பட்டனர் என்று தெரியவந்துள்ளது.

இவ்வாறான நிலையில் இந்தவாரம் அரசியல் பீதியாக பல்வேறுபட்ட மாற்றங்கள் இடம்பெறக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தால் சட்ட நடவடிக்கை

உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அரசியல் இலாபத்திற்காக மாத்திரமே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை அனைவரும் அறிவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் இந்த தீர்மானங்களுக்கு எதிராக அனைத்து எதிர்கட்சிகளும் ஒன்றிணைந்து வலுவான நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உடனடியாக தேர்தலை நடத்துங்கள்

அழுவதை மறந்த அரசாங்க தரப்பு, உரமின்றி விவசாயிகள் பெருமூச்சு விடும் போது அழுவதை மறந்த அரசாங்க தரப்பு,எரிவாயு சிலிண்டர்கள் வெடித்து உயிர் இழந்தது போது அழுவதை மறந்த அரசாங்க தரப்பு, இன்று புலம்பிய வன்னம் கதறி அழுகிறது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உடுதும்பர தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் இன்று (10) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி சனத் பண்டார அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் பெரும்திரளான ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அமைதியான போராட்டங்களைக் கண்டும் அரசாங்கம் அச்சமடைந்துள்ளதாகவும், காலி முகத்திடல் வளாகத்தில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நேற்றைய தினம் அடக்குமுறை மேற்கொள்ளப்பட்டதும் இதன் பிரகாரமே எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தாயும் மகனும் கைகோர்த்து நடத்தும் அமைதியான ஆர்ப்பாட்டத்தை கூட அரசாங்கத்தால் பொறுத்துக்கொள்ள முடியாது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,மகனிடமிருந்து தாயை பறித்துச் சென்று ஜீப்பில் ஏற்றிச் செல்லும் காட்சிகளைக் கூட பார்க்கக்கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அமைதியான போராட்டங்களில் ஈடுபடும், ஜனநாயக சுதந்திரத்தை அனுபவிப்பவர்களுக்கு எதிராக செயல்படும் அனைவருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இழப்பீடு வழங்க வேண்டிவரும் எனவும் அவர் தெரிவித்தார். அரச பயங்கரவாதத்துக்கும் அரச வன்முறைக்கும் நீண்ட கால ஆயுள் இல்லை என தெரிவித்த எதிர்கட்சித் தலைவர்,இதற்கு வரலாற்றில் பல படிப்பினைகள் உள்ளன எனவும் தெரிவித்தார். இந்த அரசாங்கம் தேர்தலுக்கு முற்றாக அஞ்சுவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,தேர்தலை பிற்போடவே முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

உடனடியாக தேர்தலொன்றை நடத்துமாறு அரசாங்கத்திற்கு சவால் விடுவதாக தெரிவித்த

எதிர்க்கட்சி தலைவர்,முடிந்தால் ஜனாதிபதி தேர்தலையும் நடத்துங்கள் எனவும் சவால் விடுத்தார்.

தேர்தலை ஒத்திவைக்க பல்வேறு சூழ்ச்சிகளை பயன்படுத்துவதை விடுத்து,முடிந்தால் மொட்டு விரும்பும் எந்தத்தேர்தலையும் நடத்துங்கள் என்றும் சவால் விடுத்தார்.

## சூழ்ச்சிகளை மேற்கொண்டு தேர்தலை....

கட்சிக்கும் உத்தரவாதம் இருக்காது என்பதனால் பல்வேறு சூழ்ச்சிகளை அவர்கள் பயன்படுத்துவதாக குற்றம் சாட்டினார்.

தேர்தலை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நடத்தப்பட வேண்டும் என்ற சூழலில் தேர்தல் முறை சரியில்லை எனக் கூறி தேர்தலை ஒத்திவைக்க முயற்சிப்பதாக தெரிவித்தார்.

தேர்தலை ஒத்திவைக்க முயன்றால் நீதிமன்றத்தை நாடுவோம் என்றும் நீதிமன்றத்தின் மூலம் நியாயமான தீர்ப்பு கிடைக்கும் என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் பாரிய விழிப்புணர்வு பேரணி!

சர்வதேச உளவள தினம் நேற்று திங்கட்கிழமை அனுஸ்டிக்கப்பட்டது.இதனை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு காந்திபூங்காவிலிருந்து மட்டக்களப்பு மாநகரசபை வரையில் பாரிய விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதுடன் அங்கு நிகழ்வுகள் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட உளவள நிலையத்தின் ஏற்பாட்டிலும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,மாவட்ட உளசமூக ஒன்றியம் உட்பட பல்வேறு அமைப்புகள் இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடுசெய்திருந்தது.

இதன்போது உளவளத்தின் மேம்பாடு தொடர்பிலும் அதன் அவசியம் குறித்தும் பொறிக்கப்பட்ட பல்வேறு பதாகைகளை ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர். உளவளத்தினை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் மற்றும் உளவள பாதிப்புகளினால் ஏற்படும் நிலைமைகள் குறித்தான பதாகைகளும் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்ட உளவள நிலையத்தின் இயக்குனர் அருட்தந்தை போல்சற்குணநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கு.சுகுணன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் அதிகளவான இளையோர்கள் கலந்துகொண்டதுடன் அது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் பங்குகொண்டனர்.

## மொட்டுக் கட்சியில் இணைந்தார் ரணில்

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

முறைமை மாற்றத்தை (சிஸ்டம் சேஞ்ச்) கோரி நாட்டில் சுனாமி ஒன்று ஏற்பட்டது. இதனால் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகியதோடு, நாட்டைவிட்டும் வெளியேறிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது எனவும் கூறினார்.

எனினும், நாட்டு மக்கள் முறைமை மாற்றத்தைக் கோரியிருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மொட்டுக் கட்சியில் இணைந்துகொண்டது மாத்திரமே நாட்டில் நடந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு



களஞ்சியத்தின் விஸ்தீரணம்
1512 சதுர அடி.
நீளம் 42 அடி,
அகலம் 35 அடி, உயரம் 18 அடி.
அலுவலக அறை
170 சதுர அடி.
குளியல் அறை,
மலசலகூடங்கள் 02,
நீர் வசதி, மின்சார வசதி ,
போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)

அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.

தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95




Main Sponsor
MUBARAK® TEXTILES

Co Sponsor
AZEEF FANCY

Official Sraee Blouse Partners
Mahalaxmi Boutique
RS Designer

Official Photography & Videography
INNOVO STUDIO

Official Sraee Florist Partner
Shan Party professionals

Media Partner
தினகரன்
Daily News
SUNDAY OBSERVER
வசந்தம் TV
வசந்தம் FM

# மட்டுநகரில் அருந்ததி வழங்கும்
# BRIDAL FASHION SHOW & CAKE EXHIBITION

2014 ஆம் ஆண்டு அருந்ததி தனியார் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து இன்று வரை திருமண த்தோடு தொடர்புடைய பலதரப்பட்ட துறைகளில் காலடி பதித்து திருமணங்களில் தனக்கென்றவொறு தனியிட த்தைப் பிடித்துள்ளது. அசைக்கமுடியாத பலமான அஸ்திவாரத்தோடு புது புது விடயங்களை அறிமுகம் செய்து நவீன காலத்திற்கேற்றவாறு தம்மை பதிவேற்றம் செய்துகொண்டிருக்கிறது.

50 இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களுடன் இணைந்து பல்வேறு ஊடக, புகைப்பட, ஆடை அலங்கார மற்றும் Aari Work அனுசரைணயாளர்களின் ஒத்துழைப்போடு தனித்துவமாய் நடைபெறும். ஏராளமான பார்வையாளர்களோடு பலரின் எதிர்பார்ப்புகளோடு இதுவரையில் எந்தவொரு நிறுவனமும் ஏற்பாடு செய்திராத மணப்பெண் அலங்காரக் காட்சியை பல இடங்களிலும் நடாத்துவதே அருந்ததியின் குறிக்கோள்.

அந்த வகையில் 2022 கடந்த ஜனவரி 10 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் மார்ச் 10ம் திகதி யாழ்ப்பாணத்திலும் மிகப் பிரம்மாண்டமாக இம் மாற்றுமோதிரம் நிகழ்வு நடைபெற்றது.

**மணப்பெண் அலங்காரக் காட்சி**
**கேக் கண்காட்சி**
**15 ஒக்டோபர் 2022**
**அஞ்சனா கிரேண்ட் பெலஷில்**

இந்த சிறப்பு நிகழ்வானது ஒவ் வொரு மாவட்டத்திலுமுள்ள பெண் முயற்சியாளர்களை இந்த சமூதாயத்திற்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாக மீண்டுமொரு மாற்று மோதிர நிகழ்வை நடாத்த அருந்ததி நிறுவனம் திட்டமி ட்டுள்ளது. அந்த வகையில் பலரின் நன்மதிப்பையும் நேர்மறையான கருத்துக்களையும் பெற்று வெற்றிப் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கும் மணப்பெண் அலங்காரக் காட்சி மாற்றுமொரு பிரம்மாண்டத்தோடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி மட்டகளப்பு அஞ்சனா கிரேண்ட் பெலஷில் நடைபெறவுள்ளது. பிரதம மற்றும் சிறப்பு அதிதிகளின் வருகையோடு பல பிரதேசங்களில் இருந்தும் சிறப்பு தேர்ச்சி பெற்ற அழகுக்கலை நிபுணர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர். எதிர்பார்ப்புகளோடு வரும் அனைவரையும் நிச்சயம் இந் நிகழ்வு திருப்திபடுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை..

## அழகுக்கலை நிபுணர்கள்




## கேக் வடிமைப்பாளர்கள்



## மட்டக்களப்பு - கரடியனாறு நெற்களஞ்சிய சாலைக்குள்
# யானைகள் புகுந்து அட்டகாசம்




**(செங்கலடி நிருபர் சுபா)**

மட்டக்களப்பு - செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்ட கராடியனாறு இலுப்படிச்சேனை அரச நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான நெற்களஞ்சிய சாலையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகளை காட்டு யானைகள் நாசப்படுத்தியுள்ளது.

இன்று அதிகாலை இலுப்படிச்சேனை நெற்களஞ்சியசாலைக்குள்ள புகுந்த காட்டு யாகைள் சுற்றுவேலிகளை சேதப்படுத்தியதுடன் களஞ்சியசாலை கட்டடித்திணையும் ஜன்னல், கதவு என்பவற்றிணையும் உடைந்து சேதப்படுத்தியுள்ளது.

நெல் மூட்டைகளில் இருந்த நெல்லையும் உற்கொண்ட யானைகள், அங்கிருந்த காவலாலியையும்; விரட்டியுள்ளதுடன் களஞ்சியசாலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 600ற்கு மேற்பட்ட நெல் மூட்டைகளில் ஒரு தொகுதியை நாசப்படுத்தியுள்ளது.

தொடர்ச்சியாக தற்போது இப்பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகுவதாக தெரிவிக்கும் விவசாயிகள், யானையிடமிரந்து பாதுகாப்பு பெற்றுத்தருமாறும் கேரிக்கை விடுகின்றனர்.

## கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை
# 14 பதக்கங்களுடன் தேசிய மட்டத்துக்கு தெரிவாகி சாதனை



**(எஸ்.அஷ்ரப்கான்)**

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை கிழக்கு மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டிகளில் 14 பதக்கங்களுடன் தேசிய மட்டத்துக்கு தெரிவாகி சாதனை நிலை நாட்டியுள்ளனர்.

கடந்த 5 ம் திகதி தொடக்கம் 9 ம் திகதி வரை கந்தளாய் லீலாரத்ன விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று முடிந்த பாடசாலை களுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலை மாணவர்கள் 4 தங்கப் பதக்கங்கள், 4 வெள்ளிப் பதக்கங்கள், 6 வெண்கலப் பதக்கங்களை வென்று பாடசாலைக்கும் கல்முனை பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இந்த வெற்றியின் மூலம் தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளதுடன் கிழக்கு மாகாணறிலே சம்பியனாகவும் (Relay Champion) இப்பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்மாணவர்களை சிறப்பாக வழிநடத்திய அதிபர் முஹம்மட் ஜாபிர், பயிற்சிகளை வழங்கிய பாடசாலை உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், போட்டியில் பங்கேற்று தமது திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்களுக்கும் பாடசாலை சமூகம் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

# வளைகுடா வானம்பாடிகள் அமைப்பால் ‘சாதனையாளர் கௌரவிப்பு’






**(வினோ)**

இந் நிகழ்வு திருக்கோவில் மகா வித்தியாலயத்தில் இனிதே நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட கௌரவ திரு. த.கலையரசன் பா. உ, கௌரவ திரு. கோ.கருணாகரம் பா.உ, கௌரவ திரு. இரா. சாணக்கியன் பா. உ,

கௌரவ திரு. தி. சரவணபவன் முதல்வர் மட்/மாநகரசபை, திருக்கோவில் பிரதேச செயலாளர்,

கௌரவ. திரு. கி. சேயோன் தலைவர் இளைஞரணி தமிழரசிக்கட்சி போன்றோர்களுடன் திருக்கோவில், பொத்துவில் முக்கிய அரச அதிகாரிகளும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தவிசாளர்களும், அதிபர், ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்புறச் செய்தனர்.

இந்நிகழ்வில் 2021 ஆண்டுக்கான ‘அம்பாறை மாவட்ட பல்துறை சாதனையாளர்கள் ’கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புறச் செய்த அனைவருக்கும் அமைப்பின் சார்பில் நன்றினை ஏற்பாடுக் குழு தெரிவித்து கொள்கின்றனர்.

மேலும் இவ்விழாவின் சகல வழிகளிலும் மிக முக்கிய பங்காற்றிய அமைப்பின் ஆலோசகர்களில் ஒருவரும் அம்பாறை மனித உரிமை செயற்பாட்டாளருமாகிய தம்பி தா. பிரதீபன் அவர்களுக்கும் களப்பணியாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# ‘புலரும் புது விடியல்’ புதுக்கவிதை நூல் வெளியிட்டு வைப்பு






**(ரக்ஸனா)**

சம்பூர் சமரனின் புலரும் புது விடியல்’’ புதுக்கவிதை நூல் வெளியீடு ஞாயிற்றுக்கிழமை 09.10.2022 கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றதாக அன்பின் பாதை சமூகம் தன்னார்வ உதவு ஊக்க அமைப்பின் பணிப்பாளர் றொசில்டா அன்டோ தெரிவித்தார்.

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய வட்டத்தின் அனுசரணையில் புலரும் புது விடியல்’’ புதுக்கவிதை நூல் வெளியீடு இலக்கிய ஆர்வலர் கனக தீபகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

முதல் பிரதி வழங்கல், நவீன இலக்கியத்தின் நகர்வு, நூல் மதிப்புரை, ஏற்புரை உள்ளிட்ட கலை இலக்கிய நிகழ்வுகள் இதன்போது இடம் பெற்றன.

இந்நிகழ்வில் வைத்திய அதிகாரிகளான ஜமுனா சிவசங்கரன், வி. காந்தீபன், ஈச்சிலம்பற்று கொட்டக் கல்விப் பணிப்பாளர் பி. மதிபாலசிங்கம், அன்பின் பாதை சமூகம் தன்னார்வ உதவு ஊக்க அமைப்பின் பணிப்பாளர் றொசில்டா அன்டோ உள்ளிட்ட இன்னும் பல பிரமுகர்கள், இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், அதிபர் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# சுவிஸில் அனைவரையும் ஈர்த்த தமிழ் மாணவர்களின் வாண்ட் இசை அணிவகுப்பு







தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து நடாத்தியவிளையாட்டு விழாவில் முதன்முறையாக பேர்ண்மாநில தமிழ்ப்பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் மாணவர்களினால் வாண்ட் இசை அணிவகுப்பும், உடற்பயிற்சிக்கண்காட்சியும் 75 மாணவர்கள் கொண்ட மாணவர் குழுவினால் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றமை அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து வரலாற்றில் தமிழ் மாணவர்களின் வாண்ட் வாத்திய இசை அணிவகுப்பு முதன்முதலாக இவ்வாண்டே நடைபெற்றுள்ளது.

இதற்கானசகல ஏற்பாடுகளையும் குறிப்பிட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் தமிழ் ஆசிரியர்களே மேற்கொண்டுள்ளதுடன். இவர்கள் பெற்றோர்களின் பாராட்டினையும் பெற்றுள்ளனர்.

குறிப்பிட்ட விளையாட்டுவிழா அண்மையில் பேர்ண் மாநிலத்தில் உள்ள வாங்க்டோர்ப் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.



# பண்ணிசை, பரதநாட்டியம் உள்ளிட்ட ஆறு கலைப்பயிற்சி நெறிகளுக்கு வித்தியாரம்பம்





(வி.ரி.சகாதேவராஜா)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலகமும் சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடாத்திய நவராத்திரி விழாவின் இறுதி நாளான விஜயதசமி அன்று வித்தியாரம்பம் சிறப்பாக நடைபெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இந்துசமய கலாசார கற்கை நிறுவகத்தின் சுவாமி விபுலாநந்தர் பயிற்சி நிலையத்தினால் அடிப்படை சான்றிதழ் பயிற்சிகளுக்கான வித்தியாரம்ப நிகழ்வு இடம்பெற்றமை விஷேட அம்சமாகும்.

பண்ணிசை, பரதநாட்டியம், கதாப்பிரசங்கம் வயலின் ,வீணை, சொற்பொழிவு ஆகிய கலைப் பயிற்சி வகுப்புகளுக்கான வித்தியாரம்பம் விபுலானந்த அடிகளாரின் மணி மண்டபத்தில் அந்தந்த வளவாளர்களால் மேற்கொள்ளப்பட்டன.

பெருந்திரளான மாணவர்கள் இக்கலைப் பயிற்சி வகுப்புகளில் பயில ஆர்வத்துடன் இணைந்ததைக் காணமுடிந்தது.

இறுதிப்பூசை நிகழ்வுகள் இந்து கலாசார உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் இந்து கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டிருந்தார்.

# 21 தம்பதியினருக்கு திருமண பதிவு







(ந.குகதர்சன் )

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலக பதிவாளர் கிளையும் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையமும் இணைந்து திருமண பதிவு வழங்கும் நிகழ்வு செயலகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எந்திரி க.அருணன் தலைமையில் திருமண பதிவு வைக்கப்படாத 21 தம்பதியினருக்கு திருமண பதிவு வழங்கி வைக்கப்பட்டதுடன், இதனுடன் மொத்தமாக 131 திருமண பதிவுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் வாகரை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலைய உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# அறநெறிப் பாடசாலை திறந்து வைப்பும், ஏழைகளுக்கு பல்வேறு உதவிகளும்









(தீபன், ந.குகதர்சன் )

சிறுவர்கள் மத்தியில் அறநெறி கல்வியினைப் கற்பிப்பதன் மூலம் ஒழுக்கமான சமூதாயத்தை உருவாக்கும் நோக்கில் லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிருவாக சபையின் நிதியுதவியினால் மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுக்குப் பொத்தானை கிராமத்தில் அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலுக்குப்பொத்தானை கிராம மக்கள் லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிருவகாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக கடந்த கால யுத்த சூழ்நிலையின் போது இடிந்த நிலையில் காணப்பட்ட கட்டடம் சுமார் ஐந்து இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. கடந்த மாதம் அமரத்துவமடைந்த லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிருவாக சபைன் உறுப்பினர் யாழ்ப்பாணம் இணுவில் பிரதேசத்தைச் சேர்ந்த அறுமுகம் கந்தையா விவேகானந்தன் அவர்களின் நினைவாக அறநெறிப் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது.

லண்டனை ஈழபதீஸ்வரர் ஆலய நிருபாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் நாகராஜா ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், லண்டனை ஈழபதீஸ்வரர் ஆலய நிருபாக சபை உறுப்பினர் எஸ்.விக்கினேஸ்வரன், உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் லோகநாதன் அனோஜன் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கடந்த கால யுத்த சூழ்நிலையின் போது இடம்பெயர்ந்து மீள்குடியேறிய இலுக்குப்பொத்தானை கிராம மக்களின் குடி நீர் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் இரண்டு பொதுக் கிணறுகளும் லண்டனை ஈழபதீஸ்வரர் ஆலய நிருபாக சபையின் நிதியுதவி மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் கணவனால் கைவிடப்பட்ட நிலையில் நோயினால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து பாதுகாப்பற்ற குடிசை வீட்டில் வாழ்ந்து வந்த இரண்டு குடும்பங்கள் தொடர்பாக லண்டனை ஈழபதீஸ்வரர் ஆலய நிருபாக சபைக்கு முன்வைத்த கோரிக்கை;கது அமைவாக வீடுகள் கட்டுவதற்காக நிதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வின் போது ஐந்து துவிச்சக்கரவண்டிகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# நுவரெலியா நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டன





(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்கள் ஏற்கனவே வாகன புகைப் பரிசோதனையை மேற்கொண்டனவா என்பதைச் பரிசோதித்து அந்த வாகனங்களில் புகை வெளியேற்றம் எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிய நுவரெலியா பொலிஸார், மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் நுவரெலியா மோட்டார் திணைக்களம் இணைந்து வாகனங்களை பரிசோதிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்தது. நுவரெலியா நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களின் புகை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது. அத்தோடு வாகனங்களில் காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு உரிய அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. இதற்காக நுவரெலியா பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாராச்சி மற்றும் பொலிஸ் அதிகாரிகள் குழு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, மற்றும் நுவரெலியா மோட்டார் பரிசோதகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அருந்ததி

இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி

இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25039 | ப + க | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 01

**21792 | வே | 1993**
மானிப்பாய் | இந்து |Diploma
Medical Executive
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**21957 | வே | 1991**
வேலணை | இந்து | BSc
Quantity Surveyor
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ | செவ்: 12

**21903 | வே | 1993**
மூளாய் | இந்து | BSc
IT Trainee
பூசம் (கடகம்)
170 செ.மீ

**24619 | வே | 1990**
யாழ்ப்பாணம் | கத்தோலிக்கம்
BD | Team Leader
சுவாதி (துலாம்)
170 செ.மீ

**21855 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | A/L
Associate Manager
பூரட்டாதி (கும்பம்)
175 செ.மீ

**25069 | வே | 1986**
பருத்தித்துறை | இந்து | BA
CIMA | Accountant
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 08

**21795 | வே+கோ| 1995**
கோப்பாய் | இந்து | A/L
Cashier | ஜேர்மனி
பூரம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 12

**24955 | சா | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Own Business
சித்திரை (துலாம்)
187 செ.மீ

**23851 | வே | 1976**
அச்சுவேலி | இந்து | A/L
Own Business
சுவாதி (துலாம்) | Canada
172 செ.மீ | சூ.செவ்: 04

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25048 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**21912 | வே | 1990**
கொக்குவில் | இந்து | MSc
Software Engineer
திருவோணம் (மகரம்) | ஜேர்மனி
180 செ.மீ | Divorced

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**21996 | வே | 1990**
நெல்லியடி | கத்தோலிக்கம்
BSc | Engineer
187 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**21891 | வே | 1992**
காரைநகர் | இந்து | BSc
Software Engineer
பூரட்டாதி (மீனம்) | USA
186 செ.மீ | செவ்: 07

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22264 | கோ | 1987**
கரவெட்டி | இந்து | Msc
Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ

**21711 | வே | 1990**
நல்லூர் | இந்து
MBBS | Doctor
சதயம் (கும்பம்)
162 செ.மீ

**21645 | கோ | 1996**
புளியங்கூடல் | இந்து | A/L
Pharmacy Assistant
உத்தரம் (சிம்மம்)
165 செ.மீ

**22261 | வே | 1996**
ஈச்சமோட்டை | RC | Diploma
Accounts Assistant
சுவாதி (துலாம்)
157 செ.மீ | செவ்: 12

**22164 | வே | 1998**
காரைநகர் | இந்து | A/L
Student (BSc)
திருவாதிரை (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**22258 | கு | 1987**
முல்லைத்தீவு | இந்து | MBBS
MD | Doctor
மகம் (சிம்மம்)
164 செ.மீ

**22167 | சா | 1991**
பண்டத்தரிப்பு | இந்து | BA
Development Officer
பூரம் (சிம்மம்)
165 செ.மீ | சூ.செவ்: 09

**21882 | வே | 1992**
மீசாலை | இந்து | BD
Regulatory Affairs
Specialist | மகம் (சிம்மம்)
160 செ.மீ | France | செவ்: 02

**21831 | வே | 1995**
திருநெல்வேலி | இந்து
A/L | Junior Executive
கேட்டை (விருச்சிகம்)
146 செ.மீ | செவ்: 01

**22053 | தே | 1992**
மாத்தளை | இந்து
BD | PGD | Doctor
உத்தரம் (கன்னி)
157 செ.மீ | செவ்: 08

**21966 | கு | 1988**
காங்கேசன்துறை | இந்து
MBBS | Doctor
சுவாதி (துலாம்)
152 செ.மீ | செவ்: 02

**21675 | கு | 1992**
பருத்தித்துறை | கத்தோலிக்கம்
A/L | Teacher
மிருகசீரிடம் (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**21738 | கோ | 1992**
கரவெட்டி | இந்து | PD
Lab Incharge | UK
உத்தராடம் (மகரம்)
172 செ.மீ | செவ்: 12

**25075 | வா.செ | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Teacher
மகம் (சிம்மம்)
174 செ.மீ

**22101 | கோ | 1995**
மூளாய் | இந்து | MBBS
Lecture & Consultant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 12

**22657 | வே | 1991**
கொக்குவில் | இந்து
Student (Music course)
ரேவதி (மீனம்)
162 செ.மீ

**25036 | அ | 1993**
கொழும்பு | இந்து | Diploma
Senior Business Analyst
அத்தம் (கன்னி)
162 செ.மீ

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22206 | கோ | 1993**
அச்சுவேலி | இந்து
A/L | Job Seeker
சதயம் (கும்பம்)
157 செ.மீ | செவ்: 01

**21930 | கோ | 1999**
அல்வை | இந்து
ACCA | Executive
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 12

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# கவிக்கோ வெல்லவூர்க் கோபாலின் கொக்கட்டிச்சோலைக் குறவஞ்சி நூல் வெளியீடு



















மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தின் அனுசரணையில் கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்களின் கொக்கட்டிச்சோலைக் குறவஞ்சி நூல் வெளியீடானது, மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி அவர்களின் தலைமையில் கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராஜா , கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் அவர்களின் முன்னிலையில் 08.10.2022 சனிக்கிழமை அன்று மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கான முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு அரச அதிபர் திரு. க. கருணாகரன் அவர்களும் கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி பாரதி கென்னடி அவர்களும் கலந்துகொண்டதோடு கௌரவ அதிதிகளாக அருள்மிகு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சர ஆலய நிர்வாகசபை தலைவர் திரு. இ. மேகராசா , செயலாளர் திரு.சி.கங்காதரன் , பொருளாளர் திரு.ச.கோகுலகிருஷ்னன் ஆகியோரும் கலந்துகொண்டனர். காலை 9.45 மணியளவில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் இறைவணக்கத்தினைத் தொடர்ந்து தமிழ்மொழி வாழ்த்தானது மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க செயற்குழு உறுப்பினர் திரு கு.விநாயகமூர்த்தி அவர்களால் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க பொதுச்செயலாளர் சட்டத்தரணி மு. கணேசராசா அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. அடுத்த நிகழ்வாக தலைமையுரையானது , மட்டக்களப்பு தமிழ்ச்சங்க தலைவர் சைவப்புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி அவர்களால் நிகழ்த்தப்பட்டது. அடுத்து நூல் வெளியீட்டுரையினை கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக நடனநாடக அரங்கியல் துறை தலைவர் கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன் அவர்கள் நிகழ்த்தினார்.

அதன் பின்னர் நூல் வெளியீடு இடம்பெற்றது. நூலின் முதற்பிரதியை சிரேஷ்ட சட்டத்தரணி க.நாராயணபிள்ளை அவர்கள் பெற்றுக்கொண்டார்.

நூல் நயவுரையினை கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.க.மோகனதாஸன் அவர்கள் நிகழ்த்தினார். அதனை அடுத்து அதிதிகள் உரைகள் இடம்பெற்றது. அதனைத்தொடர்ந்து ஏற்புரையானது நூலாசிரியர் கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து தமிழ்ச்சங்க துணைச்செயலாளர் திரு. இ.பிரதீஸ்காந்த் அவர்களால் நன்றியுரை இடம்பெற்றது. இந் நிகழ்வைத் தமிழ்ச்சங்க செயற்குழு உறுப்பினர் கதிரவன் த. இன்பராஜா அவர்கள் தொகுத்து வழங்கியதோடு நிகழ்ச்சிக்கான ஒருக்கிணைப்பினை தமிழ்ச்சங்க பொருளாளர் திரு.க.தியாகராசா ( சமாதானநீதவான் ) அவர்கள் மேற்கொண்டார்.

# வட, கிழக்கு மக்களுக்கு சிரஞ்சீவியாக வந்த ஸ்ரீ சத்யசாயி சஞ்சீவனி வைத்தியசாலை!



'திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை' என்பார்கள். போரினாலும் பல்வேறு இயற்கை , செயற்கை அனர்த்தங்களாலும் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கு, சிரஞ்சீவியாக வந்துள்ளது 'ஸ்ரீ சத்ய சாயி சஞ்சீவினி வைத்திய சாலை' .

இன்று பலராலும் பேசப்படுகின்ற இவ் வைத்தியசாலை, மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய வளமான பிரதேசமான கிரான்குளத்தில் அதுவும் பிரதான வீதி யில் அமைந்திருக்கின்றது.

இலங்கை மருத்துவ வரலாற்றில் முதல் தடவையாக கொழும்பு லேடி றிஜ்வே ஆஸ்பத்திரிக்கு அடுத்ததாக ,முதன் முதல் சிறுவர்களுக்கு என்று இலவசமாக சத்திரசிகிச்சை இடம்பெற்று வருகின்ற தெய்வீக இடமாக இந்த சஞ்சீவி வைத்திய சாலையை காண்கிறோம் .

அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்த இந்திய தூதர் கோபால் பாக்லே இங்கும் விஜயம் செய்திருந்தார்.

கொழும்புக்கு அப்பால் முதன் முதலாக சிறுவர்களுக்கு இலவசமாக இதய சத்திரசிகிச்சை அளிக்கின்ற இவ் வைத்தியசாலையுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் தெய்வீக அருள் பெறுவார்கள் என்பது ஐயமில்லை.

அந்த வைத்தியசால தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுகின்ற ஒரு கட்டுரையாக இதனை வரைகிறேன்.

களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த திருவாளர் தருமரெத்தினம் அவர்களினதும் அவர்களது குடும்பத்தாரினதும் பெருந்தன்மையான கொடைத்தன்மையால் சுமார் 100 ஏக்கர் காணியை சத்யசாயி நிலையத்திற்கு உவந்தளித்தார்கள்.

அங்கு இலவசமாக பல்வேறுவகை நிபுணத்துவ சிகிச்சை வசதிகொண்ட வைத்தியசாலைக்காக இந்த அரிய தானம் வழங்கப்பட்டது.

சமகாலத்தில் கோடிக்கணக்கான ருபாய் பெறுமதியான இக் காணியை தானம் செய்த பரோபகாரிகள் இப்பூவுலகு உள்ளவரை நன்றியுடன் நினைவு கூரப்படுவார்கள்.

7 ஆண்டுகளுக்கு முன்னர் இவ் வைத்தியசாலை ஸ்ரீ சத்யசாயி சஞ்சீவனி வைத்தியநிலையம் எனும் பெயரில் அடிக்கல் நாட்டப்பட்டது.

ஆரம்பத்தில் வெளிநோயாளர் பிரிவு தொடங்கப்பட்டு தன்னார்வ வைத்தியர் கள் தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதார உதவியாளர்களாலும் கிரான்குளம் மற்றும் ஏனைய கிராமப்புற நோயாளிகளுக்கும் தன்னுடைய பெருஞ்சேவையை வழங்கி வந்தது.

படிப்படியாக பல்வேறு சிகிச்சைகளுக்காக மாடிக்கட்டிடங்கள் அமைக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப்பிரிவு சத்திரசிகிச்சைப்பிரிவுநோயாளர் விடுதிகள் ஆய்வுகூடங்கள் தொற்றுநீக்கல்பிரிவு உள்ளடங்களாக பல்வேறு நிபுணத்துவ விசேட பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டு சத்திரசிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதன் முதலாக அண்மையில் இதய நோயினால் பாதிக்கப்பட்ட ஆறு சிறுவர்களுக்கு முற்றிலும் இலவசமாகவும் வெற்றிகரமாகவும் இதயசத்திரசிகிச்சை நடாத்தப்பட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.







இச்செய்தி சமூக ஊடகங்களில் பெரும் வைரலாக பரவியிருந்தது.

இந்த சிறுவர்களுக்காக இதயசத்திரசிகிச்சை இந்தியாவின் மிகச்சிறந்த ராய்பூர் சிறுவர் இதயசத்திரசிகிச்சை மருத்துவரான சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர்.ராகிணி பாண்டே மற்றும் அவரது தலைமையிலான அற்புதமான அறுவைச் சிகிச்சை குழு இச்சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டிருந்தது.

இலங்கை கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே நடாத்தப்பட்ட முதல் சிறுவர்களுக்கான இதயசத்திரசிகிச்சை இது என்பது குறிப்பிடப்படக்கூடிய வரலாற்று நிகழ்வாகும்.

அறுவைச்சிகிச்சைகளுக்குப் பிறகு ஒவ்வொரு குழந்தையின் பெற்றோரும் ஆழ்ந்த நன்றியுடனும் அன்புடனும் தங்களது மரியாதையை டாக்டர். ராகினி மற்றும் அவரது குழுவிற்கு வெளிப்படுத்தியுள்ளது அனைவரின் மனதையும் தொட்டுள்ளது.

இச்சத்திரசிகிச்சைக்காக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையானது வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர். இரா.முரளீஸ்வரனின் தலைமையில் குருதி வங்கி, தொற்றுநீக்கல்ப்பிரிவு,கழிவு முகாமைத்துவப்பிரிவு, கதிரியக்கவியல்ப்பிரிவு மற்றும் ஆய்வுகூடம் உள்ளடங்கலாக 6க்கு மேற்பட்ட பிரிவுகளிலிருந்து தங்களுடைய மேலதிக உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கியுள்ளனர்.

இதுமட்டுமல்லாது ,கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ அலுவல்களின் விரிவுரையாளர்களான டாக்டர். ரஜிவன் (இருதயநோய் வைத்திய நிபுணர்) மற்றும் டாக்டர்.வைதேகி (நுண்ணுயிரியல் வைத்திய நிபுணர்) தங்களுடைய பல்வேறுஉதவிகளையும் வழங்கியுள்ளனர்.

இதேபோன்று, மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையும் இதற்காக தங்களுடைய அனுமதியையும் ஆதரவையும் வழங்கியுள்ளனர்.

தன்னார்வமாக பல்வேறு ஆய்வுகூட உதவியாளர்கள் தாதியர்களும் பணியாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் ,வரும் மாதங்களில் நரம்பியல் சத்திரசிகிச்சை மற்றும் சிறுநீரக சத்திரசிகிச்சைகள் போன்ற இன்னும் பல சத்திரசிகிச்சைகளை இலவசமாக மேற்கொள்ள இருப்பதும்குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்ரீ சத்ய சாயி சஞ்சீவனி வைத்தியசாலை உண்மையில் வடகிழக்கு மக்களுக்கு கிடைத்த சிரஞ்சீவியான பொக்கிஷமாகும்.

இவ் வைத்தியசாலையின் அரும்பெரும் சேவைகள் மேலும் சிறப்பாக அமைய தங்களது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொருளாதாரம் மற்றும் வளப்பற்றாக்குறையினால் பின்தங்கிய கிராமமான கிரான்குளத்தில் இவ் வைத்தியசாலை அமையப்பெற்றது மகிழ்ச்சியான விடயமாகும்.

முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்படும் இச் திரசிகிச்சைகளுக்காக தன்னார்வ வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார ஊழியர்கள், கதிரியக்கவியளாளர்கள், மருந்தாளர்கள் மற்றும் ஆய்வுகூட தொழிநுட்பவியளாளர்கள் இவ்வைத்தியசாலையை நாடி வரும் மக்களுக்காக தங்களது உதவிகளை வழங்குமாறு சமூக ஆர்வலர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

அண்மையில் இவ்வைத்தியசாலைக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர்.அசேல குணவர்த்தணபிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர்.விஜேசேகர மற்றும் பிரபல இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணி வீரரான அரவிந்த டீ சில்வா ஆகியோர் விஜயம் மேற்கொண்டு தங்களது ஆதரவையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

மனிதாபிமான ஜீவசேவையாற்றுகின்ற சஞ்சீவி வைத்திய சாலை சிரஞ்சீவியாக சேவையாற்ற இறைவனை இறைஞ்சுவோம்.



உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)



# குறுகிய அரசியல் தேவைக்காக பேரின அடிப்படைவாதத்தினால் பலியாக்கப்பட்டவை இவைகள்:

# பல்லின ஒற்றுமை, மனித உரிமை, பொருளாதாரம், நாட்டின் கௌரவம்

ஒவ்வொரு நாட்டினதும் அபிவிருத்திக்கு அத்திவாரமாக இருப்பவை தேசிய ஐக்கியம்,மனித உரிமை,பொருளாதாரம்,அந்த நாடு பற்றிய நன்மதிப்பு போன்றவையாகும். ஆனால் துரதிஷ்டவசமாக இந்த நேரிடையான நியமங்கள் இலங்கையில் எதிர்மறையாக்கப்பட்டுள்ளன. இதற்கான காரணம் சிங்கள பௌத்த அடிப்படைவாதமாகும்.இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து சிங்கள ஆட்சியாளர்களால் அடிப்படைவாதங்கள் அரசியல் யாப்பு சட்ட,திட்ட ரீதியாகப் பின்பற்றப்படுகின்றன.இதனால் 74 ஆண்டுகளில் தேசிய அபிவிருத்தியின் அடிப்படையாக விளங்கும் பல்லின மக்களிடையிலான தேசிய ஐக்கியமானது,பிரித்தாளும் அபதந்திரம் மூலமாக ஆழமாகச் சிதைக்கப்பட்டுள்ளது.



இதனால் இனங்கள் இடையே முரண்பாடுகள் தோன்றியது.அந்த முரண்பாட்டுக்குத்தீர்வு காணாததால்,முரண்பாடு மோதலாகி அழிவை ஏற்படுத்திய 30 வருட கால யுத்தமாக மாறியது.யுத்தத்தை எப்படியாவது வெல்லவேண்டும் என்ற நோக்கில் அரசு செயற்பட்டதால் இனவழிப்புகள்,இனவன்மங்கள்,பொருளாதார இழப்புகள் இடம்பெற்றன.

இதன் காரணமாக தமிழர்கள் அழிக்கப்பட்டனர்.துரத்தப்பட்டனர் இதனால் பாரியளவில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன.அந்த விடயம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவைவரை சென்றுவிட்டது.வலிந்து காணாமல் தொலைக்கப்பட்ட தமிழுறவுகள் தொடர்பாக 13 ஆண்டுகளாக அவர்களின் உறவுகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.இனமதவாத அடிப்படையில் தமிழர்களை ஒடுக்கவும்,அழிக்கவும் அரசு நினைத்ததால் யுத்தத்திற்காக பொருளாதாரம் பலியாக்கப்பட்டுள்ளது.மேலும் யுத்தத்தினை அரசியல் வியாபாரம் ஆக்கியதால் பாரிய ஊழல் மோசடிகள்,திருட்டுகள் இடம்பெற்றுள்ளன.நமது நாடு பற்றிய மரியாதை கௌரவம் அற்றுப் போயுள்ளது.

1983 கறுப்பு யூலை இனவழிப்பின் பின்னர் அநுர பண்டாரநாயக்க அவர்கள் வெளிநாடு சென்றபோது நடைபெற்ற சம்பவம் ஒன்றினை ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.வெளிநாட்டு நண்பர் ஒருவர் தனது கையை விரித்துப்பார்த்தாராம்,இவர் என்ன பார்கிறீர்கள் என்று கேட்டாராம்,அதற்கு அவர் சொன்ன பதில்,உங்கள் கைகளிலும் இரத்தக்கறைகள் இருக்கின்றதா?என்பதைத்தான் அவதானித்ததாகக் குறிப்பிட்டிருந்தாராம் என்பது நினைவூட்டத்தக்கது.அந்த சம்பவம் தனக்கு வேதனை அளித்ததாக அன்று குறிப்பிட்டிருந்தார்.அவர் 2009இல் உயிரோடு இருந்திருந்தால் முள்ளிவாய்க்காலில் தனது கட்சிக்காரர்ரால் நடாத்தி முடிந்த இறுதி அழிப்பு யுத்தம் பற்றி என்ன கூறியிருப்பாரோ தெரியவில்லை.

அவை ஒரு புறமிருக்க,இந்த நிலையில் கடன் பொறியில் வீழ்ந்துள்ள,நமது நாட்டுக்குக் கடன் வழங்க உலக நாடுகள் பின்னிற்கின்றன.பணவீக்கம், பொருட்களின் விலையேற்றத்தால் மக்கள் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.இருந்தும் இனவாத மதவாத ஆட்சியாளர்கள் அரசியல் இலாபத்திற்காக அடிப்படை வாதத்தினையே தமது முதலீடாகப் பயன்படுத்தி அரசியல் வியாபாரம் செய்து வருகின்றனர்.நாடும் மக்களும் வங்குரோத்து அடைந்தாலும் ஆட்சியாளர்கள் செழிப்பாகவே வாழ்கின்றார்கள்.மக்கள் நரகலோகத்திலும் ஆட்சியாளர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் சொர்க்கலோகத்திலும் வாழும் நிலைபோன்று தெரிகின்றது. தமிழ்,முஸ்லிம் மக்களை பாரபட்சமாக நடாத்திய சிங்கள ஆட்சியாளர்கள் கடைசியாக சிங்கள மக்களையும் ஏமாற்றமடையச் செய்துள்ளார்கள்.இதனால் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி,பிரதமர்,அமைச்சர்களையே குறிப்பாகச் சிங்கள மக்கள் வீடுகளுக்கு அனுப்பிவிட்டனர். இப்படியான பாரிய தீங்குகள் ஏற்பட்டபோதும் இந்நாட்டில் இனவாதம், மதவாதம் ஓயவில்லை.

மொத்தத்தில் எமது நாட்டில் பேரின அடிப்படைவாதமானது நாட்டில் தேசிய ஐக்கியம்,மனித உரிமைகள். பொருளாதாரம்,பண்பாடு,கௌரவம் என்று அனைத்தையும் பலியெடுத்து விட்டது.இப்போது பாரிய கடன் பொறியில் நாடு விழுந்துள்ளது.கண்கெட்ட பின்னரும் கூட ஆட்சியாளர்கள் சூரிய வணக்கம் செய்யத் தயாராக இல்லை.அதாவது தாம் இழைத்த தவறுகளை திருத்திக் கொள்ளவே இல்லை.அவர்கள் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்வரவில்லை.அடிப்படைவாத அரசியல் நாட்டை அரசியல் பொருளாதார சமூக கலாசார ரீதியாக ஆக்கத்தைத்தரவில்லை அழிவையே தந்துள்ளது. இதனை உணராதவரை நாட்டுக்கு விமோசனம் கிடையாது.ஆட்சியாளர்கள் திருந்த இடமில்லை,அவர்களுக்கு வாக்களிக்கும் மக்களாவது திருந்தமாட்டார்களா? என்பதுதான் முற்போக்குவாதிகளின் அறிவியல் நிலைப்பாடாகும்.அழகிய நாட்டின் சரித்திரத்தை தரித்திரமாக்கிய நரித்திறன்வாதிகள் உரித்தெடுத்த பிற்போக்குவாத அடிப்படைவாதிகளாகவே இதுவரை இருந்துள்ளனர்.இந்த மனப்பாங்குதான் நாட்டை அதல விதல பாதாழத்தில் தள்ளியுள்ளது.தேசிய இனப்பிரச்சினை என்ற முடிச்சு நியாயமாக அவிழ்க்கப்பட்டால், ஏனைய முடிச்சுகள் யாவும் இலகுவாக அவிழ்ந்துவிடும் என்பதே உண்மை. இதை உணர்ந்தால் நாட்டுக்கு நன்மை கிடைக்கும்.மக்களின் பிரச்சினைகளும் தீரவாய்பபுள்ளது.



ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு

1983 கறுப்பு யூலை இனவழிப்பின் பின்னர் அநுர பண்டாரநாயக்க அவர்கள் வெளிநாடு சென்றபோது நடைபெற்ற சம்பவம் ஒன்றினை ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.வெளிநாட்டு நண்பர் ஒருவர் தனது கையை விரித்துப் பார்ததாராம்,இவர் என்ன பார்ககிறீர்கள் என்று கேட்டாராம்,அதற்கு அவர் சொன்ன பதில்,உங்கள் கைகளிலும் இரத்தக்கறைகள் இருக்கின்றதா? என்பதைத்தான் அவதானித்ததாகக் குறிப்பிட்டிருந்தாராம் என்பது நினைவூட்டத்தக்கது. அந்த சம்பவம் தனக்கு வேதனை அளித்ததாக அன்று குறிப்பிட்டிருந்தார். அவர் 2009இல் உயிரோடு இருந்திருந்தால் முள்ளிவாய்க்காலில் தனது கட்சிக்கார்ரால் நடாத்தி முடிந்த இறுதி அழிப்பு யுத்தம் பற்றி என்ன கூறியிருப்பாரோ தெரியவில்லை.

# தம்பிலுவில், திருக்கோவில் பிரதேசங்களில் பாரிய கடல் அரிப்பு





(வி.ரி. சகாதேவராஜா


தம்பிலுவில் ,திருக்கோவில் பிரதேசங்களில் அண்மைக்காலமாக பாரிய கடல் அரிப்பு இடம்பெற்று வருகிறது.

தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்துக்கு முன்னாலுள்ள கடல் பகுதி மற்றும் திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்திற்கு முன்னால் உள்ள கடல் பகுதிகள் இந்த பாரிய கடலரிப்புக்கு இலக்காகி வருகின்றது. கடந்த ஒரு வார காலமாக இடம் பெற்று வரும் இந்த கடல் அரிப்பில் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் அடித்து செல்லப்பட்டு இருக்கின்றன. அது போல ஏனைய மரங்களையும் கடல் காவு கொண்டிருக்கிறது. சுமார் 100 அடி பரப்பு கடலுக்குள் காவுகொள்ளப்பட்டு இருக்கின்றது . மக்கள் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றார்கள்.

மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. அவர்களது மீன்பிடி வள்ளங்கள் கரையை விட்டு நகர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கடலரிப்பை தடுத்து நிறுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.











நுவரெலியாவின் நு / கார்லபேக் தமிழ் வித்தியாலயத்தின் வாணி விழா கடந்த 5 ஆம் திகதி கலை வாணி அருளோடு அதிபர் அ.சவரிமுத்து தலைமையில் இனிதே நடைபெற்றது. இதன் போது மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் வெகு விமரிசையாக அறங்கேரியது. போட்டி நிகழ்ச்சிகளின் போது வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெற்றமை விசேட அம்சமாகும். மேலும் இந்நிகழ்வின் போது பாடசாலை அபிவிருத்தி சங்க தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில் பட்டிருப்பு கல்வி வலயம் 194 புள்ளிகளைப் பெற்று சம்பியனாக தேரிவு

(எப்.முபாரக் )

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில் பட்டிருப்பு கல்வி வலயம் 194 புள்ளிகளைப் பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள பதினேழு கல்வி வலயங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கந்தளாய் லீவாரத்தின பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்கிழமை (5) உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகின.

இதில் மூவாரத்திற்கும் மேற்பட்ட வீர வீராங்களைகள் பங்குபற்றியிருந்தார்கள்.

ஐந்து நாட்களாக நடைபெற்று முடிந்த விளையாட்டுப் போட்டிகளில் இறுதி நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை (9) நடைபெற்றன.

இதில் கல்முனை கல்வி வலயம் 94 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும்,கந்தாய் கல்வி வலயம் 88 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும்,அக்கறைப்பற்று கல்வி வலயம் 85புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும்,தெகியத்தகண்டி கல்வி வலயம் 82 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தையும்,அம்பாறை கல்வி வலயம் 68 புள்ளிகளைப் பெற்று ஆராம் இடத்தையும் ,கிண்ணியா கல்வி வலயம் 64 புள்ளிகளைப் பெற்று ஏழாம் இடத்தையும்,திருகோணமலை கல்வி வலயம் 59 புள்ளிகளைப் பெற்று எட்டாவது இடத்தையும்,மட்டக்களப்பு கல்வி வலயம் 55புள்ளிகளைப் பெற்று ஒன்பதாம் இடத்தையும், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் 53 புள்ளிகளைப் பெற்று பத்தாவது இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது.





மட்டக்களப்பு மத்தி(52),திருக்கோவில் (45),மகோயா(33),திருகோணமலை வடக்கு (15),மற்றும் முதூர்(15),கல்குடா(8),சம்மாந்துறை(5),போன்ற கல்வி வலயங்கள் முறையே பதினொன்றிலிருந்து பதினேழு வரை தெகிவாகியிருந்தன.முதல் மூன்று இடங்களைப் பெற்ற கல்வி வலயங்களுக்கு பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இறுதி நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி புள்ளைநாயகம்,கந்தளாய் வலக் கல்விப் பணிப்பாளர் ஏ.டபிள்யு. தருமத்திலக்க,கிண்ணியா,பட்டிருப்பு,மற்றும் மூதூர்,திருகோணமலை போன்ற கல்வி வலயங்களின் உடற்கல்வி பணிப்பாளர்கள் உட்பட அதிபர்கள்,ஆசிரியர்கள் பெருந்திரலான வீர வீராங்கனைகளும் கலந்து சிறப்பித்தார்கள்.

# களுதாவளை மகாவித்தியாலயம் தேசிய பாடசாலை இம்முறையும் முதலிடம் பெற்று சாதனை





05.10.2022 தொடக்கம் 09.10.2022 வரை கந்தளாய் லீலாரெத்ன விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாணமட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழாவில் மட்/பட்/களுதாவளை மகாவித்தியாலயம் தேசிய பாடசாலை 123 புள்ளிகளுடன் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டதோடு வெற்றிக்கிண்ணத்தையும் 25,000 ரூபா பணப்பரிசினையும் தனதாக்கிக் கொண்டனர். இவ்விளையாட்டு விழாவில் 15 தங்கப்பதக்கங்கள், 09 வெள்ளிப்பதக்கங்கள், மற்றும் 08 வெண்கலப்பதக்கங்களையும் தட்டிச்சென்றனர். அத்தோடு 18 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் சிறந்த மெய்வல்லுனர் வீரராக செல்வன் எம்.கதுஸ்கர் அவர்களும் சிறந்த பெண்அஞ்சல் குழுக்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். அத்தோடு கிழக்கின் முதல் கல்வி வலயமாக 194 புள்ளிகள் பெற்று பட்டிருப்பு கல்வி வலயம் முதலிடம் பெற்றுக்கொண்டது..

முதல் நிலை பெற்ற பாடசாலைகள் விபரம்

1வது மட்/பட்/களுதாவளை மகாவித்தியாலயம் தேசிய பாடசாலை - 123 புள்ளிகள்

2வது திரு/கந்/அக்ரபோதி தேசிய பாடசாலை - 46 புள்ளிகள்

3வது மட்/பட்/செட்டிபாளையம் மகாவித்தியாலயம் - 42 புள்ளிகள்

**முதல் நிலை பெற்ற கல்வி வலயங்களின் விபரம்**

பட்டிருப்பு கல்வி வலயம் - 194
கந்தளாய் கல்வி வலயம் -94
கல்முனை கல்வி வலயம் - 88

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இடம்பெற்ற புத்தக கண்காட்சி





(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள் மடம் கிராமத்தில் அமைந்துள்ள பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திங்கட்கிழமை(10) முகமாக புத்த கண்காட்சி ஒன்று இடம்பெற்றது.

பொதுநூலகர் திருமதி தவராஜா ஜேசித்ரா அவர்களின் ஏற்பாட்டில், வாசகர்களின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இக்கண்காட்சியில் குருக்கள்மடம் வாசகர் வட்ட தலைவர் சி.விவேகானந்தம், மட்.பட். குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலய மாணவர்கள், மற்றும் ஆசிரியர்கள், கிராம முக்கியஸ்தர்கள் ஆலய பரிபாலன சபை உறுப்பினர், கழகங்கள், சங்கம் என கிராம மக்கள் பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது நூலகத்தில் உள்ள நூல்கள் தொடர்பில் விளக்கங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டதோடு அவர்கள் வாசிப்பிலும் ஈடுபட்படனர். மேலும் வீட்டுத் தோட்டம் சம்பந்தப்பட்ட விளக்கங்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, மாணவர்களுக்கு நூலகத்தில் அமைந்துள்ள, வீட்டுத்தோட்ட பயிர்களை பார்வையிடவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

# வெற்றியும் தோல்வியும் வீரன் ஒருவனுக்குத் தான் இரண்டையும் ஏற்றுக்கோண்டே ஆக வேண்டும்

(எப்.முபாரக்)

வெற்றியும் தோல்வியும் வீரன் ஒருவனுக்குத் தான் இரண்டையும் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும் என கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி என். புள்ளைநாயகம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி நிகழ்சிகள் கந்தளாய் லீவாரத்தின பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமை (9) பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

அனைத்து விடயங்களும் கல்வி வாழ்க்கையின் சிறந்த அனுபவங்களாக பெற்று கடைப்பிடித்து ஒழுக வேண்டும்.அடுத்து தேசிய மட்டத்தில் எவ்வாறு வெற்றிகளை பெற வேண்டும் என்பது பற்றி சிந்தித்து பயிற்சிகளை பெற வேண்டும்.

இன்னும் ஒரு மாதத்தில் தேசிய மட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன அதற்கு அனைத்து மாணவர்களும் தயார் படுத்திக் கொள்ளுங்கள்.

தேசிய மட்டத்தில் கிழக்கு மாகாணம் முதலிடம் பெறுவதற்கு அனைவரும் பாடுபட வேண்டும்.அவ்வாறு கிழக்கு மாகாணம் முன்னிலையில் வருகின்ற பட்சத்தில் கல்வி மற்றும் ஏனைய துறைகளும் மேலும் வளர்ச்சியடைவதற்கான சந்தர்ப்பங்கள் கூடுதலாக கிடைக்கும்.

கிழக்கு மாகாண போட்டி நிகழ்சிகள் அனைத்தும் சிறப்புற நடைபெறுவதற்கு செயற்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் எனது பாராட்டையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

# மட்டக்களப்பு குருக்கள்மடம் புனித பிரான்சிஸ் அசிசியார்ஆலயத் திருவிழா ௨0௨௨

(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடம் புனித பிரான்சிஸ் அசிசியார் ஆலயத்திருவிழா திருவிழா 30.09.2022 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

அருட்தந்தை லெபோர்ட் சுதன் அவர்களுடைய தலைமையில் அருட் தந்தை நிர்மல் சூசை மற்றும் அருட்தந்தை அம்போர்ஸ் அடிகளார் போன்ற அருட் தந்தையர்கள் மற்றும் பக்தர்கள் புடை சூழ இறுதி நாள் உற்சவமான ஞாயிற்றுக்கிழமை (09) ஊர்வலம் இடம்பெற்று அன்னதான நிகழ்வுகளும் இடம்பெற்றதைத் தொடர்ந்து கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவு பெற்றது. பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு பல கீதங்கள் இசைக்கப்பட்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

# சட்டத்தரணி தனுக அவர்களுக்கு தமிழன் என்ற வகையில் எனது தனி மரியாதையை தெரிவிக்கிறேன்



ரூபவாஹினியில் கடந்த சில மாதங்களாக இடம்பெற்றுவரும் 'தமிழ் ஒழிப்பு' நிகழ்ச்சி நிரலின் ஒரு அம்சமான தேசிய தொலைக்காட்சி அலைவரிசையின் தனிச்சிங்கள சின்ன (ஃணிஞ்ணி) பயன்பாட்டை தனுக தனிமனிதனாக எதிர்த்தார். தனியொருவராக நீதிமன்றம் சென்றார், வென்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி தமிழ் மொழியையும் உள்ளடக்கிய சின்னம் 2022.10.07 முதல் மீண்டும் ஒளிபரப்பப்படுகிறது.

தமிழுக்காக முன்னின்ற சகோதர சிங்கள இனத்தவரான தனுக அவர்களுக்கு இருகரம் கூப்பி நன்றி கூறுகிறேன்.

கடந்த ஆறேழு மாதங்களாக ரூபவாஹினி நிறுவனத்தில் தமிழ் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதனை தடுக்க முற்படும் தனித்



தமிழ் பற்றுள்ள அதிகாரிகளும் அவமதிக்கப்படுகிறார்கள், தூக்கியெறியப்படுகிறார்கள். பொய்க்காரணங்களைக் கூறி நிரந்தரமாக வெளியேற்ற முயற்சிக்கிறார்கள்.

சில கோடரிக்காம்பு தமிழர்கள் மட்டும் நிறுவனத்தினால் சலுகைகளுடன் உபசரிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு தமிழ் எப்பாடுபட்டாலும் எமக்கென்ன என்ற சுயநலப்பித்து. இவர்கள் தமிழ் இனத்தின் சாபங்கள்.

இந்த விடயம் போல் பத்துக்கு மேற்பட்ட விடயங்கள் ரூபவாஹினிக்குள் உள்ளன. அதில் ஒன்றுதான் இந்த அடையாளச்சின்னம் (ஃணிஞ்ணி) சார்ந்த பிரச்சினை.

இப்பிரச்சினைகள் தொடர்பாக
தமிழ் அமைச்சர்கள்,
தமிழ் இராஜாங்க அமைச்சர்கள்,
தமிழ் எம்பிக்கள்,
முன்னைநாள் தமிழ் அமைச்சர்கள், எம்பிக்கள்,
வடக்குக் கிழக்கு சார்ந்த தமிழ் தேசியம் மற்றும் அபிவிருத்தி பற்றி பேசும் தமிழ் எம்பிக்கள்,
ஏனைய சில தமிழ் அரசியல்வாதிகள்,
தமிழ் அரச உயர் அதிகாரிகள்,
தமிழ் ஊடகவியலாளர்கள்

என பலரிடம் இதுபற்றி நான் ஆதாரங்களுடன் எழுத்து மூலம் அறிவித்தேன்.

ஆனால் இதுவரை இப்பிரச்சினைகள் பற்றி மேற்கூறிய எவரும் ஒருதுளி நடவடிக்கை கூட எடுக்கவில்லை.

ஆனால், 'தமிழ்' 'தமிழ்' என்று




போலி வேடம் போடுகின்றனர்.

இவ்வாறான தமிழ் சார்ந்த பிரச்சினைகளை தட்டிக்கேட்க முடியாதவர்கள், பொதுவெளியில் அவர்களே இவைகளை அறிந்து செய்ய வேண்டிய விடயங்கள்.

இங்கு அதைப்பற்றி அறிவித்தும் செய்யாதவர்களாக அதிகமான தமிழ்த்தலைமைகள்.

இவர்களை என்னவென்று சொல்வது?

எப்படியோ, அவற்றில் ஒரு விடயம் சிங்கள நண்பரின் தனிமனித செயற்பாட்டால் நடந்தேறியுள்ளது.

அதனால் மீண்டும் அவருக்கு தலைவணங்கி நன்றி கூறுகிறேன்.

மிகுதி விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதற்கும் சில நண்பர்கள் உதவுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

சட்டத்தரணி தனுகவின் தனிமனித செயற்பாட்டு படங்கள் சில.

**நன்றி தனுக.**
**மட்டக்களப்பைச் சேர்ந்த மோசேசின் முகப்புத்தகத்திலிருந்து**




# 4 வருட சேவையை பூர்த்தி செய்து இந்தியா திரும்புகிறார் இ.கி.மின் சுவாமி தக்ஷயானந்த ஜீ

**( வி.ரி.சகாதேவராஜா)**

மட்டக்களப்பு கல்லடி ராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் நான்கு வருட கால ஜீவ சேவையை முடித்துக் கொண்டு எதிர்வரும் 16 ஆம் தேதி இந்தியா திரும்புகின்றார்.

அவரது அர்ப்பணிப்பான சேவையை பாராட்டி வழியனுப்பும் பிரியாவிடை வைபவம் எதிர்வரும் 15 ஆம் திகதி கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்லத்தில் நடைபெற இருக்கின்றது.

இ.கி.மிஷன் ஆர்வலர்கள் சிவானந்தா பழைய மாணவர்கள் இல்ல பழைய மாணவர்கள் இணைந்து அந்த நிகழ்வை நடத்த



ஏற்பாடு செய்துள்ளார்கள்..

இதேவேளை, கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல புதிய முகாமையாளராக இதுவரை உதவிப் பொது முகாமையாளராக சேவையாற்றிய ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் நியமிக்கப்பட்டிருக்கின்றார் .

அவரிடம் எதிர்வரும் 14 ஆம் தேதி சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் இல்ல பொறுப்புகளை உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட இருக்கின்றார்..

அதேவேளை ,இந்தியாவில் இருந்து மட்டக்களப்புக்கு வரும் சுவாமி சுரர்ச்சிதானந்தஜி அவர்கள் கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல உதவி முகாமையாளராக பணிபுரிய இருக்கின்றார்.

# முறக்கோட்டான்சேனை இ.கி.மி. வித்தியால மாணவன் ஈட்டி எறிதல் போட்டியில் 1ம் இடம்பெற்று தேசிய மட்டத்திற்கு தேரிவு

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட முறக்கொட்டான்சேனை இ.கி.மி. வித்தியால மாணவன் மாகாண மட்டத்தில் ஈட்டி எறிதல் போட்டியில் 1ம் இடம்பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை - கந்தளாய் லீலாரத்ன பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிழக்குமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளப் போட்டி -2022 பேட்டிகளில் மட்/கககு முறக்கொட்




டான்சேனை இ.கி.மி. வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன்

தவராஜா பிராத்தனன் 20வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுளார்.

இவரது இவ் வெற்றி பாடசாலைக்கும் பாடசாலைச்சமுகத்திற்கும் பெருமையைச் சேர்த்துள்ளமையுடன், மாணவனுக்கும் பாடசாலைக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்கும் பாராட்டுக்களும் குவிகின்றன.

# குளக்கோட்ட மன்னன் காலத்தில் நிறுவிய ஆதிசிவன் ஆலயத்தில் விக்கிரகம் பிரதிஷ்டை









**(ந.குகதர்சன்)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள எல்லை கிராமமான தோணிதாட்டமடு கிராமத்தை காக்கும் குளக்கோட்ட மன்னன் காலத்தில் நிறுவிய ஆதிசிவன் ஆலயத்தில் மக்களின் வழிபாட்டுக்கு ஏற்ப சிவலிங்கமும் விநாயகர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

அருள்மிகு 108 சிவலிங்க நாகலிங்கேசுவரர் உடனருள் நாகலிங்கேசுவரி சிவாலய சிவபூமியின் தலைமை அருட்சுனைஞர் நிறுவனருமான சிவத்திரு.இ.ரமேசுகுமாரனார் சிவலிங்கமும், உலகெலாம் சிவமயம் ஆன்மீக குருபீடத்தின் நிறுவுனர் சிவத்திரு. உயிரொளி சிவகுகனாரினால் விநாயகர் விக்கிரகமும் ஆகியோரால் வழங்கப்பட்டது.

கடவுள் மங்கல நன்னீராட்டு தமிழர் பாரம்பரிய வழிபாட்டு அமைப்பு, சைவத் தமிழ் குருபீடம் அகில இலங்கை சைவத்தமிழ் மன்றம் போன்ற வழிபாட்டு அமைப்புக்களின் செந்தமிழாகம அருச்சுனனைஞர்களினால் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு யாக பூசை மற்றும் எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வு நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இந்து ஆன்மீக வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வரும் இளைஞர்கள் சகிதம் கலந்து கொண்டு எல்லைக் கிராமங்களை பாதுகாக்கும் வகையிலும் இந்து ஆன்மீகம் அழியாத வகையிலும் செயற்பட்டு வருகின்றனர்.

# மீனாட்சி அம்மனின் திருவுருவப்படம் வேளியீடு!

**( காரைதீவு சகா)**

நிந்தவூர் மடத்தடி அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை பிரேம் போடப்பட்ட மீனாட்சி அம்மன் திருவுருவப்படம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கனடாவைச் சேர்ந்த திரு.எஸ். அசோகன் அவர்களின் பிறந்தநாளை ஒட்டி இப்படங்கள் ஆலயத்திற்கு அவரால் அன்பளிப்பு செய்யப்பட்டது.

இத்திருவப்படம் வெளியிட்டு நிகழ்வு ஆலய தலைவர் தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது .

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கோவர்த்தன சர்மா முதல் படத்தையும் ஆலய பரிபாலன சபை ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா, தலைவர் கி.ஜெயசிறில் அடுத்த பிரதிகளை வழங்கி வைத்தார்கள்.

அடியார்களுக்கும் ஆலய பரிபாலன் சபையினருக்கும் இவை வழங்கி வைக்கப்பட்டன.

இதிலிருந்து கிடைக்கின்ற நிதி ஆலயத்துக்கு சேர்க்கப்பட்டுள்ளது என்று ஆலய செயலாளர் த. சண்முகநாதன் தெரிவித்தார்.

கனடாவைச் சேர்ந்த திரு அசோகன் அவர்களின் பெயரில் விசேட பூஜையும் அன்னதானமும் இடம்பெற்றன.